## வணக்கம்!

### கல்வி – சனிக்கிழமை - 09:30 -12:30 (10:45 - 11:15)

வழமையான நேரத்தில் வழமைபோல் நடைபெறும்.

**-அன்னை தமிழ்முற்றப் தெரிவு போட்டிகள் 09.03.2024 லோறன்ஸ்கூக் வளாகத்தில்.**
**-அன்னை தமிழ்முற்றப் இறுதி போட்டிகள் 16.03.2024 றொம்மன் வளாகத்தில்.**
அன்னை தமிழ்முற்றப் போட்டிகள் 2024 விபரம் – எழுத்து மற்றும் ஒலிவடிவத்துடன்.

அன்னை முற்ற போட்டி விண்ணப்ப படிவம்

### கலைவகுப்புகள் - சனிக்கிழமை

எமது வளாகத்தில் கலை வகுப்புகள் நடைபெறுவது அனைவரும் அறிந்ததே. நடனம் மற்றும் சங்கீத வகுப்புகள் வாரந்தோறும் சனிக்கிழமைகளில் 12.45 மணியிலிருந்து 13.45 மணி வரை சில வருடங்களாக நடைபெற்று வருகின்றது. ஆனால் குறைந்த எண்ணிக்கையான மாணவர்களே கலைப்பாடங்களுக்கு செல்கிறார்கள். அந்த வகையில் எமது வளாகத்தின் கலைத்துறையை மேலும் வளப்படுத்த புதிய சில திட்டங்களில் புதிய பல மாணவர்களை உள்வாங்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம்.

விருப்பமுள்ள பெற்றோர்கள் உங்கள் பிள்ளைகளை இணைத்து பயனடையும் வண்ணம் வேண்டிக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு கலைப்பொறுப்பாளர்
கை தொ பே இல: 400 58 232
மின்னஞ்சல் முகவரி: Lorenskog.annai@gmail.com

### எமது வளாக இக்கல்வியாண்டில் நடைபெறவுள்ள நிகழ்வுகள்

**02.03.2024 ஆண்டுக்கூட்டம் 2024**
**13.04.2024 சித்திரை விழா**
**09.06.2024 விளையாட்டுப்போட்டியும் கல்வியாண்டு நிறைவும்.**

குறிப்பு: சூழ்நிலைக்கேற்ப வரும்மாற்றங்களுக்கு எம்மை புரிந்துணர் வோடு தயார்நிலைப்படுத்துவோம்.

### நிதி

இதுவரை அறவிடப்பட்ட அனைத்து கட்டணங்களையும் செலுத்தும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம். செலுத்தியவர்கள் இத்தகவலை விலத்திச்செல்லவும்.

### சிற்றுண்டிச்சாலை

**இவ்வாரம் வழமைபோல் இயங்குநிலையில் இருக்கும்**. 10:15 முதல் மேல்க்கட்டிடத்தில் சிற்றுண்டிகள் விற்பனையில் இருக்கும் அனைவரும் அவ்வேளை வந்து பிள்ளைகளுக்காகவோ அல்லது தங்களுக்காகவோ தேவையானவற்றை வாங்கலாம். ***தாங்கள் பயன்படுத்தும் உணவுப்பொருட்கள் அல்லது தேனீர் அருந்தும் கோப்பைகள் இருப்பின் அவற்றை அப்புறப்படுத்தி சுத்திகரித்துச் செல்லல் வேண்டும். புரிந்துணர்வுக்கு நன்றி.***

**முக்கிய கவனம் மற்றும் வேண்டுகோள்!**

1.மாணவர்கள் வெளியில் பயன்படுத்தும் காலணிகளைக் கழற்றி கட்டிடத்தினுள் பயன்படுத்தக்கூடிய காலணிகளையும் கொண்டுவருதல் மிக முக்கியம்.

2.கற்பித்தல் நேரங்களில் கீழ்க்கட்டிடத்தினுள் எந்தப் பெற்றோரும் காத்திருப்பதற்கு ஒப்புதல் இல்லை.

3.பாடசாலையில் தீப்பிடித்ததற்கான அறிகுறியை அறிவிக்கும் அபாயமணி ஒலிக்கும்பட்சத்தில் (Brannalarm), அனைவரும் கட் டிடங்களிலிருந்து தாமதமெதுவுமின்றி வெளியேறவேண்டும். அனைவரும் அவசர வாகனப் போக்குவரத்துக்கு இடையூறின்றி (brannbil, ambulanse osv) வாகனத்தரிப்பிடத்திலுள்ள கொடிக்கம்பத்தினருகே ஒன்றுகூடவேண்டும்.

வகுப்பிலுள்ள மாணவர்களை வெளியே கூட்டிவருவது ஆசிரியர்களின் பொறுப்பாகும். பெற்றோர்கள் வகுப்பறை நோக்கிச் செல்வதற்கு அனுமதியில்லை.

எப்பொழுதும் வாகனங்களை அவசர வாகனப் போக்குவரத்துக்கு இடையூறின்றி (brannbil, ambulanse osv) நிற்பாட்டுதல் அவசியமென்பதை நினைவிற்கொள்க!

எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது சந்தேகங்கள் இருப்பின் வளாகப் பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம். தொலைபேசி இல. 918 75 537.

## தமிழை வளர்க்கப் பணிபுரிவோம்!

நன்றி.

இவ்வண்ணம்
நிர்வாகம்
**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் லோறன்ஸ்கூக்**